ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1877/59 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1877/59 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**ஹக்மன கெபலியபொல புராண ரஜமஹா விஹாரை புனித பிரதேசத்தினை புனித பூமியாகப் பிரகடனப்படுத்தல்**

*இலக்கம் 1681 கொண்ட 2010 நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளை*

*இலங்கைச் சனநாயகசோசலிசக் குடியரசின் 1681/3 ஆம் இலக்கம் கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பௌத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் கலாநிதி திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள புனித பூமி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தித் துறை விடயம் தொடர்பாக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் நீண்டகால பாதுகாப்பு கருதி அந்தப் பிரதேசத்தினை புனித பிரதேசமாகவும் அதனை "ஹக்மன கெபலியபொல புராண மஹா விஹாரை புனித பூமி" என அறிமுகப்படுத்திக்கொள்ள முடியுமெனவும் பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*கலாநிதி தி. மு. ஜயரத்ன,*
*பிரதமர், பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சர்.*

*பௌத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சு,*
*இலக்கம் 135, அநகாரிக்க தர்மபால மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2014, ஓகத்து 20.*

**அட்டவணை**

*ஹக்மன கெபலியபொல புராண ரஜமஹா விஹாரை புனித பூமி உள்ளடக்கும் பிரதேசம்*

*நிலஅளவையாளர் நாயகத்தின் 2011, மே மாதம் 12 ஆம் திகதிய இலக்கம்* MR/HKM/2011/87 *கொண்ட திட்ட வரைபடத்தில் லொட் இலக்கம்* A *இனால் குறிப்பிடப்பட்டுள்ள தென் மாகாணத்தில், மாத்தறை நிருவாக மாவட்டத்தில், ஹக்மன பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 14* A *கொண்ட கம்பலியபொல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 2.7968 ஹெக்டேயார்ஸ் பரப்பளவு கொண்ட கீழ் குறிப்பிடப்படும் எல்லைகளைக் கொண்ட பிரதேசம்.*

*வடக்கு: மலிதுவ மத்துமகே ஹீன்ஹாமி உட்பட பலர் உரிமைகோரும் வரகாகொடகே வத்த, சேனபாலகமகே உட்பட பலர் உரிமைகோரும் அம்பகஹவத்த, சபுஆரச்சிகே சுனில் உட்பட பலர் உரிமைகோரும் கெக்குலன் பிட்டிய;*

*கிழக்கு : லியனகே தர்மதாச உட்பட பலர் உரிமைகோரும் கெக்குலன் பிட்டிய, நீர்ப்பாசனக் கால்வாய், பிரதேச சபை வீதி;*

*தெற்கு : பிரதேச சபை வீதி;*

*மேற்கு : பிரதேச சபை வீதி, மலிதுவ மத்துமகே ஹீன்ஹாமி உட்பட பலர் உரிமைகோரும் வரகாகொடகேவத்த, சேனபால கமகே உட்பட பலர் உரிமைகோரும் அம்பகஹவத்த.*

*09-482*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*